சென்று, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

207—

சுற்றுலாத் தலம்

***11851—திரு. மு. பாபு:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதி, இடைகழிநாடு பேரூராட்சி, ஆலம்பரைகோட்டையை சுற்றுலாத் தலமாக மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செய்யூர் தொகுதி, இடைகழிநாடு பேரூராட்சிக்குட்பட்ட ஆலம்பரைகோட்டை தமிழ்நாடு தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் சார்பாக ஆலம்பரைகோட்டை பகுதியினை மேம்படுத்தும்பொருட்டு, ஆசிய வளர்ச்சி வங்கியின் மூலமாக 3 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. மேலும், தொல்லியல் துறை நிதியின் மூலமாக கோட்டையின் முன்பக்கம் சூரிய மின்சக்தி விளக்கு வசதிகள் ரூ.40 ஆயிரம் செலவில் தற்போது செய்து தரப்பட்டுள்ளன.

ஆலம்பரைகோட்டை பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் தேவையின் அடிப்படையில், பல்வேறு அடிப்படை வசதிகளை மேற்கொள்ள, தமிழ்நாடு சுற்றுலாத் தலங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தொடர்புடைய தொல்லியல் துறையின்மூலம் கருத்துரு மற்றும் திட்ட

2023 அக்டோபர் 9]

மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன் பெறப்படுமாயின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள்.*

திரு. மு. பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக சாதி ஒழிப்பு, சுய மரியாதைப் போராளி மாவீரன் இமானுவேல் சேகரன் அவர்களுக்குப் பரமக்குடியில் மணிமண்டபம் அமைக்க வேண்டும் என்று கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்து வந்த நிலையில், கடந்த 11 ஆம் தேதி, திரு. இமானுவேல் சேகரன் அவர்களுக்குத் திருவுருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலும், எமது தலைவர் எழுச்சித் தமிழர் திரு. திருமாவளவன் அவர்களின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று திரு. இமானுவேல் சேகரன் அவர்களது பிறந்த நாளாகும். அவருக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து 100 கி.மீ. தூரத்திலும், மாமல்லபுரத்திலிருந்து 50 கி.மீ. தூரத்திலும், பாண்டிச்சேரியிலிருந்து 50 கி.மீ. தூரத்திலும், கிழக்குக் கடற்கரைச் சாலையில், அதாவது, tourism corridor*–ல் அமைந்துள்ளது ஆலம்பரைகோட்டை. அங்கு, தினந்தோறும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட சுமார் ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். அவர்களுக்குக் கழிப்பறை வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட எந்த அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவில்லை. அங்கு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[*2023 அக்டோபர் 9*

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2023 ஆம் ஆண்டு, ஆலம்பரைகோட்டை பகுதியில் சாலை வசதிகளை மேற்கொள்ள ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட சுற்றுலா அலுவலர்மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் கருத்துரு பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட வசதிகளையெல்லாம் செய்து தருவதற்கு சம்பந்தப்பட்ட துறையின்மூலம் ஆலம்பரைகோட்டையில் தேவையான பணிகளை செய்வதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் பரிந்துரை செய்து எங்களுக்கு எழுத்து மூலமாகக் கிடைத்தால் நிச்சயமாக செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள்.*

திரு. மு. பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலம்பரைகோட்டையில் பழைய காலத்து காசுகளும், பழைய கருவிகளும், பண்டைய பொருட்களும் கிடைத்துள்ளன. அதனைக் காட்சிப்படுத்தினால், சுற்றுலாப் பயணிகள் அங்கே அதிகமாக வருவார்கள். அதனைக் காட்சிப்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதன்முதலாக, தமிழ்நாடு சுற்றுலா கொள்கை, 2023 என்ற திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். அதனடிப்படையில்* Master Plan *அதாவது, சுற்றுலா பெருந்திட்டத்தை அறிவித்து, தமிழ்நாடு முழுவதும் 300 இடங்களில் முதலீடுகளை ஈர்த்து ரூ.20,000 கோடி செலவில் பல திட்டங்களைக் கொண்டு வருவதாக அறிவித்திருக்கிறார்கள்.*

2023 அக்டோபர் 9]

நிச்சயமாக எதிர்காலத்தில் அந்தப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, எது, எது தேவைப்படுகிறது என்பதை முதலிடம், இரண்டாமிடம் என்று முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்தி அதனடிப்படையில் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்பமை பேரவைத் தலைவர் அவர்களே, வீராணம் ஏரியைத் தூர்வாரி நடுவில் ஒரு நடுத்திட்டை அமைத்து, அதனை சுற்றுலாத் தலமாக விரிவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கையை பலமுறை இந்த மாமன்றத்தில் தங்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். நிச்சயமாக அதனை தமிழ்நாடு அரசு நிறைவேற்றும் என்ற நம்பிக்கை இருக்கிறது. முதற்கட்டமாக, சுற்றுலாப் பணிகளை எவ்வகையில் செய்ய முடியும் என்பதை ஆய்வதற்காக ஒரு நிபுணர் குழுவையாவது அமைப்பதற்கு துறை முன்வருமா என்பதை இந்தத் தருணத்தில் தங்கள் வாயிலாகக் கேட்கிறேன். ஒருபுறத்தில் 20 கிலோ மீட்டரில் கங்கை கொண்ட சோழபுரம்; இன்னொருபுறத்தில் அருள்மிகு பூவராகவ சுவாமி ஆலயம்; இன்னொருபுறத்தில் நடராசருடைய கோயில்; அருகிலே பிச்சாவரம்; மற்றொரு புறத்தில் நெய்வேலி என்று சூழ்ந்திருக்கின்ற இந்த இடத்திலே ஒரு சுற்றுலாத் தலம் மேம்படுத்தப்படுமானால், அது மிகச் சிறந்த திட்டமாக இருக்கும். அதனைச் சாத்தியப்படுத்துவதற்கான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஒரு நிபுணர் குழுவை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதைக் கேட்பதற்கு இரம்மியமாக இருக்கிறது. ஆனால் வீராணத்தினுடைய அமைப்பு முறை தங்களுக்குத் தெரியும். மேலே ஒரு பக்கம் road; கீழே மதகு. மண்ணை எடுத்தால் forehead-ல் கொண்டுசென்று போட வேண்டும். இன்னொருபுறம் road. இதற்கிடையில் எங்கே இதனை*

அமைப்பது? இதற்கு ஆய்வு நடத்த வேண்டியதில்லை. நானே நேரில் வருகிறேன். நாம் இருவரும் அதனைப் பார்வையிடலாம். இடத்தைக் காட்டுங்கள்; நாங்கள் செய்து தருகிறோம். எங்களுடைய நிலைமை அதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் 38 மாவட்டங்களிலும் ஆய்வு செய்து, சுற்றுலா அலுவலர் மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் முக்கியமான 10 இடங்களைத் தேர்வு செய்துதரும்படி கேட்டோம். அந்தப் பட்டியலைப் பெற்றுள்ளோம். நிச்சயமாக அந்தப் பட்டியலில் நீங்கள் சொல்வதும் வந்திருக்கும். இல்லையென்றாலும், தாங்கள் ஒரு கடிதத்தைக் கொடுங்கள். நிச்சயமாக ஆய்வு செய்து, நிதியாதாரத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவினைப்பெற்று, அதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.G. வெங்கடாசலம், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

208—

ஆரம்ப சுகாதார நிலையம்

***39153—திரு. A.G. வெங்கடாசலம்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், மைக்கேல்பாளையம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,